OS.61/2022

நாள். 24.07.2025.

பி.வா.சா.1 – சத்யா

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

நான் ஏற்கனவே கூறியதுபோல் வாதி வெள்ளைப்பேப்பரில் என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. வாதி எனக்கும், என் அப்பாவிற்கும் தனித்தனியாக வாங்கிய கடனை திருப்பி செலுத்தகோரி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நானும், என் அப்பாவும் வாதி எங்கள் இருவர் மீதும் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் வழக்கு விவரங்களை தெரிந்து கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். நான் பதில் அறிவிப்பில் என் அப்பாவிற்கு அனுப்பிய அறிவிப்பிற்கும் சேர்த்து மறுத்து பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் எனக்கும் வாதிக்கும் நல்ல குடும்ப பழக்கம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதியிடம் 2015ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரூ.15 இலட்சம் வாங்கினேன் என்றும், அதற்கு 2020ம் ஆண்டு செப்டம்பர் வரை மாதமாதம் ரூ.45 ஆயிரம் வட்டி செலுத்தியுள்ளேன் என்றால் நான் வாங்கவில்லை, என் கணவர் தான் அந்த பணத்தை வாங்கினார். என் கணவர் அந்த பணத்தை காசோலையாக வாங்கினாரா, ரொக்கமாக வாங்கினாரா என்றால் எனக்கு தெரியாது. நான் அறிவிப்பில் மாதமாதம் ரூ.45 ஆயிரம் வட்டியாக செலுத்தி வந்தோம் என்பதற்கு ஆவணங்கள் வைத்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா தற்போது எங்கு உள்ளார் என்றால் என்னுடன் வசித்து வருகிறார், சிலசமயங்களில் அவரது வீட்டிலும் இருப்பார். என் அப்பா மீது போடப்பட்ட வழக்கையும் (OS.70/2022) நான் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். OS.70/2022ல் 1ம் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள கடன் உறுதிமொழி ஆவணத்தை காசிவிஸ்வநாதன் என்பவர் எழுதினார் என்றால் சாட்சி முதலில் சரி என கூறிவிட்டு பிறகு எழுதாத பேப்பரில்தான் கைரேகை வைத்தார். என்னிடம் காட்டப்படும் 02.08.2021ம் தேதி என் அப்பா எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் கடனுறுதி சீட்டில் நானும், என் கணவரும் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரிதான். என் அப்பாவை மிரட்டி வாங்கினார். வாதியிடம் நான் வாங்கிய ரூ.25 இலட்சத்தையும், என் அப்பா எனக்கு வாங்கி கொடுத்த ரூ.17 இலட்சத்தையும் திருப்பி கொடுக்க சொன்னார் என்றும்,

அதனால் நான் என் அப்பாவை என் வீட்டிலிருந்து விரட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. என் அப்பா நீதிமன்றத்திற்கு வந்தால் வாதியிடம் பணம் வாங்கிய விவரத்தை சொல்லிவிடுவார் என்பதால் அவரை நீதிமன்றத்திற்கு வரவிடாமல் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவரும் வாதியிடம் வாங்கிய பணத்தை கொடுத்துவிடு என்று சொன்னார் என்றும், நான்தான் கொடுக்க மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் நான் எழுதிக்கொடுத்த அடமான பத்திரத்திலும், என் அப்பா எழுதி கொடுத்த கடன் உறுதிமொழி பத்திரத்திலும் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார் என்றும் அவரை நான் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். 2015ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வாதியிடம் ரூ.15 இலட்சம் வாங்கினோம் என்றும், அந்த தொகைக்கு 2020 செப்டம்பர் வரை மாதமாதம் ரூ.45 ஆயிரம் வட்டி கொடுத்ததாகவும், அந்த தொகைக்கு ஆதரவாகத்தான் 12.10.2020ம் தேதி அடமான ஆவணமும், என் அப்பா 02.08.2021ம் தேதி வாதிக்கு கடன் உறுதி ஆவணம் எழுதிக் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா 2021ம் ஆண்டு ரூ.17 இலட்சம் வாங்கியதற்கு பின்னர் வட்டி செலுத்தினாரா என்றால் என் அப்பா பணம் வாங்கவில்லை. என் அப்பா மற்றும் என்னை வாதி மிரட்டி அடமான பத்திரமும், கடனுறுதி ஆவணமும் எழுதி வாங்கினார் என காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா என் மீது என்னை ஏமாற்றி கைரேகை வாங்கிவிட்டார் என்றோ, என்னுடைய தாயார் பெயரில் இருந்த கிரைய பத்திரத்தை எடுத்து வாதிக்கு கொடுத்துவிட்டாரோ என்று புகார் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. 2015ம் ஆண்டில் வாதியிடம் பணம் பெறும்போது காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கடந்த 12.10.2020ம் தேதி வாதியிடம் பெற்ற அடமான கடன் ரூ.25 இலட்சத்தை நான் வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டவள் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.